Milk Colony, Madhavaram.

* 49 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether any notice was received from the Milch Cow licensees of the Madhavaram Government Dairy Project in January 1968 that they will undergo a fast protesting against the levy of rent, penal interest, scavenging tax and water tax ; and

(*b*) if so, the action taken thereon by the Government ?

அரசினர் பால் பண்ணை, மாதவரம்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாதவரம் அரசினர் பால் பண்ணையில் கறவை உரிமம் பெற்றவர்களிடம் (licensees) வாடகை கட்டணம், இரட்டை வட்டி வரி, தோட்டி வரி, தண்ணீர் வரி ஆகிய வரிகள் வசூலிப்பதை எதிர்த்து 1968 ஜனவரியில் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிக்கை வந்ததா?

(இ) ஆமெனில், அதன் மேல் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) ஆம்.

(இ) மாதவரம் பால்பண்ணை, கறவை உரிமம் உடையோர் சங்கம் அச்சிட்டு வெளியிட்ட சிறுவெளியீட்டில் இவை யாவும் தெரிவிக்கப்பட்டிருப்பினும் ஆணையாளரை அவர்கள் சந்தித்துப் பேசுகையில் இக் கோரிக்கைகளைப்பற்றி அவர்கள் குறிப்பிட வில்லை. உரிமக் கட்டணம், இடவசதிக் கட்டணம் ஆகியவற்றைத் தள்ளுபடி செய்யுமாறு மட்டுமே அவர்கள் கேட்டுக்கொண்டனர். இந்தக் கோரிக்கைகளை அரசாங்கம் ஒப்புக்கொண்டு, உரிமக் கட்டணம், இடவசதிக் கட்டணம் ஆகியவற்றை வசூலிப்பதை 1968-ம் வருடம் ஏப்ரல் மாதம் 1-ந் தேதி முதல் ஓராண்டு காலத்துக்கு தள்ளி வைத்து ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, சர்க்காருக்கு ரூ. 350-க்கு மேலாக 40 சத விகிதம் சர்க்கரையைக் கொடுத்துவிட்டு பொதுமக்களுக்கு ரூ. 305-க்கு சர்க்கரை ஆலை அதிபர்கள் விற்றது அரசுக்குத் தெரியுமா ? ரூ. 305-க்கு வெளி மார்க்கெட்டில் விற்று விட்டு, சர்க்காருக்கு ரூ. 350-க்கு விற்றதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: லெவி முறையில் கொடுத்தது 60 சதவிகிதம் போக மீதமுள்ள 40 சதவிகிதம் சர்க்கரையை ரூ. 350-க்கு அல்லது ரூ. 400, ரூ. 500 என்று வடக்கே உள்ள மாநிலங்களில் விற்கும் சூழ்நிலையில் சர்க்கரை ஆலை அதிபர்கள் இருந்தபோது, அவர்களை வற்புறுத்தி நமக்கு ரூ. 350-க்கு

26th February 1969]

கொடுக்க ஒத்துக்கொள்ளப்பட்டது. வாங்கிய பிறகு சர்க்கரை விலை இறங்கியதால்தான் ரூ. 305 என்று குறைந்தது. அதைத்தான் அங்கத்தினர் குறிப்பிடுகிறார்கள். வெளியில் ரூ. 305 இருக்கும் போது ரூ. 350 கொடுத்து வாங்கியதாக வீணை குற்றச்சாட்டை சர்க்கார் மீது சுமத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆலை முதலாளிகளை அழைத்து கேட்டுக்கொண்டதன் பேரில் அதன் தலைவர் கோதாரி அவர்கள் சர்க்காருடன் ஒத்துழைக்கும் முறையில் ரூ. 350-க்குக் கொடுக்க ஒப்புக்கொண்டார்கள்.

Sugar.

* 50. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the South Indian Sugar Factory owners are selling sugar to the public at the rate of Rs. 305 per bag ; and

(*b*) the price at which the State Government had purchased sugar from the Sugar Mills per bag of sugar ?

சர்க்கரை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென்னிந்திய சர்க்கரை ஆலை அதிபர்கள் சர்க்கரை, மூட்டை ஒன்றுக்கு ரூ. 305 ஆக பொதுமக்களுக்கு விற்பது உண்மையா ?

(இ) தமிழக அரசு மூட்டை என்ன விலைக்கு ஆலைகளிட மிருந்து வாங்கியது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இந்திய அரசு சர்க்கரை கட்டுப்பாட்டை ஓரளவு நீக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தது. இதன்படி வீடுகளுக்கும், மருத்துவ மனைகள், அனாதை விடுதிகள் போன்ற முன்னுரிமை வகையினருக்கும் வழங்கப்படு வதற்காக இந்நாட்டில் உற்பத்தியாகும் மொத்த சர்க்கரையில் 60 சதவீதம் விதிமுறைக் கொள்முதல் (levy) செய்து எஞ்சிய 40 சதவீதத்தை, இந்திய அரசிடமிருந்து பெறும் விடுவிப்பு ஆணைக்கு உட்பட்டு, சர்க்கரை ஆலைகள் இந்தியாவில் எந்தப் பகுதியிலும் எந்த விலைக்கும் விற்றுக் கொள்ளலாம். எனவே, இம்மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகள், இந்திய அரசு அனுப்பும் விற்பனை கட்டுப்பாடில்லாத சர்க்கரையை அவை விரும்பும் எந்த விலைக்கும் விற்பனை செய்யலாம்.

(இ) இம் மாநிலத்திற்குள்ளேயே, விற்பனைக் கட்டுப்பாடற்ற சர்க்கரை அளவு முழுவதையும் நியாயமான விலையிலும், எல்லா ருக்கும் கிடைக்கச் செய்வதையும், பெரு மொத்தமாகப் பயன்